# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No. 87 /2018

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–06, மருத்துவர் திரு.செந்தில்குமார் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செந்தில்குமார் | வயது | : | 52/26 |
| த.பெ/ க.பெ. | : | துரைராஜன் | தொழில் | : | மருத்துவர் |
| ஊர் | : | ஜெயங்கொண்டம் | நிலை | : | LW08 / PW06 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரசு பணியிலிருந்து விலகி, ஜெயங்கொண்டம் நகரில் தனியார் மருத்துவராகபணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2018ம் தேதியன்று நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது, இரவு சுமார் 08.30 மணியளவில், வாழைக்குறிச்சியைச் சேர்ந்த கோவிந்தம்மாள், வயது 45 என்பவரை அவரது கணவர் ராஜேந்திரன் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். கோவிந்தம்மாள் தன்னை தெரிந்த 4 நபர்கள் அவரது வீட்டில் வைத்து அன்றைய தினம் மாலை சுமார் 05.00 மணியளவில், உருட்டுக்கட்டையால் தாக்கியதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து,

உள்நோயாளியாக அனுமதித்தேன். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1) சுமார் 2 –3 மணி நேரம் அளவிலான 5 செ.மீ. அளவுள்ள தையலிடப்பட்ட காயம் இடது பக்க பக்கவாட்டு மண்டையில் இருந்தது.

2) இடது பக்க தோள்பட்டையில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

இவருக்கு தலைக்காயம் இருந்ததால், மேல்சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கபட்டார். அங்கு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, 11.01.2018 ம் தேதியன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு அங்கு சிகிச்சையளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அதையொட்டி நானும் அவருடைய காயங்கள் சாதாரண காயங்கள் என்று இறுதிகருத்துரை வழங்கினேன். **அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று மற்றும் அவருக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்படட கருத்துரை படிவம் ஆகியவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கோவிந்தம்மாளுக்கு ஏற்பட்ட 1, 2 காயங்கள் அருகாலில் தலை இடித்து, கீழே விழுவதால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. அவர் ஏற்கனவே சிகிச்சை பெற்றுவிட்டுத்தான் என்னிடம் வந்தார் என்றால் சரிதான்.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.